# ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி

வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி குளித்தலையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர், முனைவர். P. பாண்டியராஜன், அவர்கள் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, விவசாயிகள் அனைவரும் தங்களது வயலில் மண் பரிசோதனை செய்து மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை தெரிந்து கொண்டால் தான் உர நிர்வாகத்தை சிறப்பாக கடைபிடிக்க முடியும். மேலும், தழைச்சத்து, மணிச்சத்து, மற்றும் சாம்பல் சத்துக்களைத் தவிர நுண்ணூட்டச் சத்துக்களையும் சரியான தருணத்தில், சரியான அளவு அளித்தால், பயிர் சாகுபடியில் அதிகளவு மகசூல் பெறலாம். குறிப்பாக உயிர் உரங்களை தவறாமல் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து, உயிர் உரங்கள், அசோலா, தொழு உரம்/குப்பை மற்றும் வேர் உட் பூசணம் போன்றவற்றை அதிகளவில் பயிர் சாகுபடியில் பயன்படுத்துவதால், உரச் செலவை குறைத்து, மண் வளத்தை அதிகரித்து, சுற்றுச் சுழலை மாசுப்படுத்தாமல் அதிகளவு மகசூல் எடுக்க முடியும். மேலும், அவர் கூட்டுறவு சங்கங்களிலும் உயிர் உரங்களை விற்பனை செய்ய வேண்டும் என்றார். முனைவர். K. J. ஜெயபாஸ்கரன், முதன்மை விஞ்ஞானி, தேசிய வாழை ஆராய்ச்சி மையம், போதாவூர் அவர்கள் கலந்து கொண்டு வாழையில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்து பயிற்சி அளித்தார். மேலும், வாழையில் ஏற்படும் சத்து பற்றாக்குறை மற்றும் அவற்றிற்கான நிவர்த்தி முறைகள் குறித்தும் விளக்கம் அளித்தார். நபார்டு வங்கியின் துணைப்பொது மேலாளர் திரு. எ. பார்த்திபன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது: நபார்டு வங்கியின் மூலம் நீடித்த வேளாண்மைக்கான திட்டத்தின் மூலம் இயற்கை விஞ்ஞானி திரு. G. நம்மாழ்வார் அவர்கள் மூலம் மிகச் சிறப்பாக கரூர் மாவட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் அனைவரும் நீடித்த விவசாயத்திற்கு செயற்கை உரங்களை குறைத்து கொண்டு, இயற்கை உரங்களை அதிகளவு பயன்படுத்த வேண்டும் என்றார். திரு. M. சந்தானம், இணை பதிவாளர், கூட்டுறவு சங்கம், அவர்கள் பேசுகையில், கூட்டுறவு சங்க அலுவலர்கள் அனைவரும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்து ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றார். மேலும், இப்பயிற்சியில் திரு. முனியாண்டி, தோட்டக்கலை உதவி இயக்குநர், திரு. கரிகாலன் நிர்வாக இயக்குநர், விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி, நச்சலூர் மற்றும் திரு. சுரேஷ், இஃப்கோ நிறுவனம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இப்பயிற்சி திரு. A. V. கோபால தேசிகன், முன்னோடி விவசாயி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையில் அவர் விவசாயிகள் அனைவரும் வேளாண் அறிவியல் மையத்தை அணுகி, ஒருங்கிணைந்த உர மேலாண்மைக்கான ஆலோசனைகளை தக்க தருணத்தில் பெற்று, பயிர் சாகுபடியில் அதிக மகசூல் பெற வேண்டும் என்றார். இம்மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர்

முனைவர். ஜெ. திரவியம், அவர்கள் பேசுகையில் அறிவியல் ரீதியாக பயிர்களுக்கு உரமிடுதல், அனைத்து வகையான உரங்களையும் சீராக பயிர்களுக்கு அளித்தல், நுண்ணூட்டச்சத்துக்களின் பயன்பாடு மற்றும் பரிசோதனைக்கு அரசு நிறுவனாங்களால் உட்படுத்தாத உரங்களை பயன்படுத்துதல் கூடாது போன்ற பல்வேறு கருத்துக்களை விவசாயிகளிடையே வலியுறுத்தினார். இம்மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்) திருமதி. பெ. தமிழ்செல்வி அவர்கள் பயிற்சிக்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று நன்றி கூறினார். 130 விவசாயிகள் மற்றும் கூட்டுறவு சங்க அலுவலர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.